Registered No. M-4483.

# யுத்த சஞ்சிகை

மலர் II.] 1942-ம௵ ஆகஸ்ட்டு௴ 7௳, வெள்ளிக்கிழமை [இதழ் 31

## அதிர்ஷ்டக் குறி



இவர் தென்னாப்பிரிக்கர், விமானி. அரை நிமிஷத்தில் 2 ஜெர்மன் விமானங்களைச் சுட்டு வீழ்த்தியவர். இது வரை 4 விமானங்களைச் சுட்டு வீழ்த்தியிருக்கிறார் ; 5 விமானங்களைக் காயப்படுத்தியிருக்கிறார். மற்றொன்றையும் நாசப் படுத்தி யிருக்கலாம் என்று தெரிகிறது. அப்போதெல்லாம், அவர் அணிந்திருந்த சட்டையைக் கையில் ஏந்திக் கொண்டிருக்கிறார். அதிலுள்ள மான் தான், தன் அதிர்ஷ்டக் குறி என்று கூறிக் கொள்ளுகிறார்.

## இந்தியாவில் பாரசூட் பட்டு நெசவு

### ரூ. 18,50,000 செலவிடத் திட்டம்

இப்போது இந்தியாவில் பட்டுப் பாகு, கையால் ஓட்டப் படுகிறது. இதை இனி இயந்திரங்களால் ஓட்டும் முறையை வகுத்திருக்கிறார்கள். இதன் பொருட்டு மன்னர் பிரான் அரசாங்கத்தார் திட்ட மிட்டு, ரூ. 18,50,000 இந்தியாவில் செல விடு வதென முடிவு செய்திருக்கிறார்கள். இந்தியாவிலே சென்னை, வங்காளம் ஆகிய மாகாணங்களிலும் மைசூர் சமஸ்தானத்திலும் தான் பட்டுப் பூச்சியை வளர்க்கிறார்கள். இயந்திரங்களில் ஓடிய பாகைக் கொண்டு நெய்த துணியைக் கொண்டு தான் பாரசூட் செய்ய முடியும். சென்னை மாகாணத்தில் அரசாங்கத்தாரே இந்த வேலையை நடத்துவார்கள். மைசூரிலே இது குடிசைத் தொழிலாக இருந்து வருகிறது. இந்தத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு அரசாங்க உதவி இனிக் கிடைக்கும். தனிப்பட்டவர்களும், கம்பெனிகளும் இத்தொழிலைச் செய்ய அனுமதிக்கப் படுவார்கள். வங்காளத்தில் இத்தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு அரசாங்கத்தார் கடன் கொடுத்து உதவுவார்கள். பட்டைப் பரீட்சிக்கவும் செப்பனிடவும் இரண்டு கட்டிடங்கள் கட்டுவதும் இத்திட்டத்தின் நோக்கம். இனிமேல் 1942-43-ம௵த்திற்குத் தேவையான அளவிற்கு பாரசூட் செய்வதற்கான பட்டுத் துணி, நாடா, கயிறு முதலியவற்றை இந்தியாவிலேயே தயாரிக்க வேண்டிய ஏற்பாடுகளெல்லாம் முடிந்து விட்டன.

# எகிப்தியப் போர் நிலைமை

## நமது விமான பலம் மிகவும் மேலானது

### அமெரிக்கப் படைகள் லண்டன் விஜயம்

எகிப்து நிலைமையைக் குறித்து லெப்டினெண்ட் ஜெனரல் சர் டக்ளஸ் ப்ரௌன்ரிக் கீழ்க் கண்டவாறு தெரிவிக்கிருர் :—

நமக்குச் சாதகமான முறையில் எகிப்திய நிலைமை சற்று தளர்ச்சி யடைந் திருக்கிறது. ஜெர்மன் படைகள் நம் படைகளைத் தாக்கின. நம் படைகள் அவற்றை தடுத்து விரட்டி விட்டன. நம் எட்டாவது படை தன் முயற்சியினல், கடற் கரை நெடுகவும் அங்குள்ள ரயில் பாதை நெடுகவும் முன்னேறி விட்டது.

ஜெனரல் ஆகின்லெக் அளவு கடந்த பொறுமை யோடிருந்தார். பலம் திரட்ட வேண்டியே அவர் இதுவரை பின் வாங்கிக் கொண்டிருந்தார். பலம் சேர்ந்த பிறகு, தாக்குவதற்கு எது ஏற்ற தருணம் என்று எதிர் பார்த்துக் கொண்டிருந்தார். தகுந்த சமயத்தில் தாக்கினர். அலமீன் போர்முனைக்கு இவரும் போய் இருந்தார். அந்த வெற்றியைப் பொருத்துத் தான் மற்ற எல்லாம் நடை பெற வேண்டி யிருந்தது. அப் போர் முனையில் வலது புரத்தில் ஆழத் தாக்கினர். இங்கேயும் வெற்றி கிடைத்தது. ஒவ்வொரு நாளும் இவர் நிலைமை மேலும் மேலும் பலப் பட்டுக் கொண்டு வருகிறது. அதுபோலவே ரோமெல்லுக்கும் (ஜெர்மன் படைத் தலைவர்) பலம் அதிகப் பட்டுக் கொண்டே வருகிறது.

ஜெர்மன் படைகளை விட நம் படை ஒரு வகையில் உயர்ந்திருக்கின்றது. அது தான் விமானப் படை. பிரிட்டிஷ் விமானப் படையைச் சேர்ந்த நம் விமானிகளான, தென் ஆப்பிரிக்கரும், ஆஸ்திரேலியரும், அமெரிக்கரும், போர்க் களத்தி லுள்ள நம் தோழர்களுக்கு உதவ வேண்டி, எப்படி இடை விடாது பறந்து வந்து கொண்டிருந்தார்கள் என்று கூறும் அறிக்கையை, மிகவும் பெருமை யோடு நாங்கள் படித்தோம். இதில் இன்னொரு விசேஷம் அடங்கி யிருக்கிறது. நம் விமானங்கள் தடை யில்லாமல் பறக்கும் படி எதிரி விமானங்கள் எப்படி அனுமதித்துக் கொண்டிருந்தன என்னும் கேள்வி பிறக்கலாம். எதிரி விமானப் படையை விட, நம் விமானப் படை மேலானதாக இருந்ததனல் தான், இது சாத்திய மாயிற்று.

யுத்தத்தில் எதுவும் நிச்சயமில்லை. க்ரீட் என்னும் தீவிற்கும் வடாப்பிரிக்கக் கடற் கரைக்கும் 200 மைல்கள் தான். இங்கே எதிரி விமானங்கள் அநேகம் வந்திறங்கி யிருக்கின்றனவாம். படைகளும் கூட வந்திருக்கின்றனவாம்.

ருஷ்யப் போர்முனையில் காகஸஸுக்குப் போகும் வழி நெடுக ஜெர்மன் படைகள் போதுமான அளவு முன்னேறிய பிறகு, சைபிரசையாவது சிரியாவையாவது தாக்க இப்படைகளை உபயோகப்படுத்தலாம்; அல்லது, இது வரை யுத்தத்தில் பங்கு கொள்ளாதிருக்கும் துருக்கி, மீறி தாக்க ஆரம்பித்தால், அந்த நிலைமையைச் சமாளிக்க வேண்டியும் உபயோகப்படுத்தலாம்; ரோமல்லுக்குத் தேவை அதிகப்பட்டாலும், உபயோகிக்கலாம். அல்லாமலும், அவருக்கு விமான பலம் வந்து கொண்டிருக்கிறதென்று நாம் நிச்சயமாக அறிவோம். ஏனென்றல் சில நாட்களுக்கு முன், நம் விமானங்கள், உதவிக்கு வந்து கொண்டிருந்த எதிரிப் படை விமானங்களைத் தாக்கின, இதில் 12 விமானங்கள், சுடப் பட்டிருக்க வேண்டும்; அல்லது பழுதாக் கப்பட்டிருக்க வேண்டும் என்றும் தெரிகிறது.

#### அமெரிக்கப் படைகள் வருகை

பொது ஜனங்கள் எதிர் பாராத இடங்களில் எல்லாம் அமெரிக்கப் படைகள் வந்திறங்கி யிருக்கின்றன. இது ஒரு திருப்திகரமான அறிகுறி தான். முதல் முதல் அமெரிக்கப் படைகள் ஐஸ்லாந்திற்குப் போய்ச் சேர்ந்தன. பிறகு வட அயர்லாந்திற்கும் அதன் பிறகு ஆஸ்திரேலியாவிற்கும் போய்ச் சேர்ந்தன. ஆஸ்திரேலியாவி லுள்ள நேச தேசப் படைகளுக்குத் தலைமை வகித்து நடத்துகிறவர் அமெரிக்க ஜெனரலான மெக்கார்தர் தான். லண்டனில் அமெரிக்கப் படைகள் வந்திறங்கிய காட்சியைக் கண்டு நாம் எவ்வளவு சந்தோஷப் பட்டோம்! பர்மா யுத்தத்தில் சீனப் படைகளுக்குத் தலைமை வகித்து நடத்தியவர் ஜெனரல் ஸ்டில்வெல். ஜெனரல் அலெக்ஸாந்தர் தலைமையின் கீழிருந்த நம் படைகளோடு இவை இணைந்து போராடின. இந்தப் போர் முனையில் நம் விமானப் படை மிகவும் பலக் குறைவா யிருந்தபோது, அமெரிக்கன் வாலிண்டியர் கோஷ்டியைச் சேர்ந்த விமானிகள் மிகச் சிறந்த முறையில் தொண்டாற்றினர்கள்.

இதில் சிநேகம் மட்டும் ஏற்படுகிறது என்பதல்ல. இரண்டறக் கலக்குந் தன்மையும் உண்டாகிறது.

ரஷ்யப் போர் முனையிலிருந்து வரும் செய்தி திருப்திகரமா யில்லை. ரஷ்யர்களின் அணிவகுப்பைத் துளைத்துக் கொண்டு சுமார் 100 மைல்கள் வரை, ஜெர்மன் படைகள் 200 மைல் அகலத்திற்கு உள் நுழைந்து விட்டன. வாரனெஜ் நகரத்திற்கு எதிரில் டான் நதியைப் பல விடங்களில் எதிரிகள் கடந்து விட்டார்கள். மாஸ்கோவிற்கும் ராஸ்டோவிற்கும் ஓடிக் கொண்டிருந்த ரயில் பாதையை ஜெர்மானியர் இடையே வெட்டி விட்டார்கள். ஸ்டாலின்கிராட் வழியாகப் போகும் அந்த ரயில்வேயைக் காப்பாற்றுவதை யொட்டி, அநேக விஷயங்கள் அடங்கி இருக்கின்றன.

---

# யுத்தத்திற்கு தேவையான நிலங்கள்

## தேவைப் படாதபோது உரிமை யாருக்கு

யுத்தத்திற்குத் தேவையான எந்த நிலத்தையும் எடுத்துக் கொள்ள அரசாங்கத்திற்கு உரிமை யுண்டு. இந்தியப் பாதுகாப்புச் சட்டம் இவ்வுரிமையை அவர்களுக்கு அளிக்கிறது. இப்படி எடுத்துக் கொள்ளப் படும் நிலங்கள், இனி தமக்குத் தேவை யில்லை என்று அரசாங்கத்தார் கருதுவார்களானல், தம் உரிமைகளையும், நன்மைகளையும் பாதிக்காத முறையில் அவற்றை திருப்பிக் கொடுத்து விடுவதாக உறுதி கூற வேண்டு மென்று சில நிலச் சொந்தக்காரர்களும் வார பர்த்தியதைக் காரர்களும் இந்தியா அரசாங்கத்தாருக்கு அறிவித்தனர்.

இது பற்றிய ஒரு முறையை வகுப்பதைக் குறித்து இந்தியா அரசாங்கத்தார் மாகாண அரசாங்கங்களைக் கலந்து கொண்டிருக்கின்றனர். இதற்கிடையில், அவர்களுடைய உரிமைகளையும் நன்மைகளையும் பாதிக்காத முறையில் நடந்து கொள்ளுவார்கள்.

# 'பரிபூரண சுயேச்சை' தருவதுதான் நோக்கம்

## காமன்ஸ் சபையில் இந்தியா நிலைமை பற்றி கேள்விகள்

அமெரிக்கப் பத்திரிகைகளும் இங்கிலாந்தி லுள்ள பத்திரிகைகளும் இப்போது இடைவிடாது இந்திய நிலைமையைக் குறித்தே தலையங்கங்கள் எழுதிக் கொண்டு வருகின்றன.

" மாஞ்செஸ்டர் கார்டியன் " ஒரு லிபரல் கட்சிப் பத்திரிகை. சர் ஸ்டாபோர்ட் கிரிப்ஸ் இந்தியாவிற்கு வழங்க இருந்த திட்டத்தை இந்தியர்கள் இப்பொழுது விரும்பினாலும் ஏற்றுக் கொள்ளலாம் என்று அமெரி (இந்தியா மந்திரி) செய்த ஒரு பிரகடனத்தைக் குறித்து அப்பத்திரிகை ஆகஸ்ட்டு௴ 4௳ வெளியீட்டின் தலையங்கத்தில் குறிப்பிட்டிருக்கிறது. மேலும் அது கூறுவதாவது :—

> இங்கேயும் (இங்கிலாந்திலும்) இந்தியாவிலும் பிரிட்டிஷாரைப் போலவே இந்தியர்களும் தம் முழு கவனத்தையும் இதில் செலுத்திப் பார்க்க வேண்டும். கிரிப்ஸ் திட்டத்தைக் குறித்து இன்னமும் கொஞ்சம் பேர்களுக்குத் தப்பு எண்ணம் இருக்கிறதாகத் தெரிகிறது. இந்தத் திட்டத்தைக் காங்கிரஸ் நிராகரித்தது. அதன் பயனாக முஸ்லீம் லீகும் நிராகரித்தது; என்றாலும் இதுபற்றி பிரிட்டிஷ் அரசாங்கத்தார் அதிகமாக இலட்சியம் செய்ய வில்லை. இந்தத் திட்டத்தை ஏற்றுக்கொள்ள இந்தியத் தலைவர்கள் மறுத்த பிறகு. இதை வாபீஸ் பெற்றுக் கொள்ளுவதா இல்லையா என்பதைக் குறித்து பலவித யோசனைகள் இருந்து வந்தன. இதுபற்றி 1942-ம் வருஷம் ஏப்ரல்௴ 28௳ காமன்ஸ் சபையில் ஒரு அங்கத்தினர் கேட்ட கேள்விக்கு இந்தியா மந்திரி கனம் அமெரி கொடுத்த பதிலாவது :—

> இந்தத் திட்ட நகலை வாபீஸ் பெற்றுக் கொள்ளுவது என்பதற்கு என்ன தெளிவான அர்த்தம் என்று கேட்கப்படுகிறது. நாம் அதை வாபீஸ் பெற்றுக் கொள்ளவே கூடாது என்பது தான் நம் நோக்கம். அதாவது, கூடிய சீக்கிரம் இந்தியா முழு சுயேச்சை யடைய வேண்டும். என்னென்ன நிபந்தனைகளின் பேரில் அடைய வேண்டும் என்பது பற்றி, அந்நாட்டு நிலைமைகளுக்குத் தகுந்தபடி அந்நிபந்தனைகளை அவர்களே வகுத்துக் கொள்ள வேண்டும்.

சமீபத்தில் காங்கிரஸ் காரியக் கமிட்டி அறிக்கை வெளியானதை யொட்டி மீண்டும் காமன்ஸ் சபையில் இதே கேள்வி எழுந்தது. அப்போது அதாவது சென்ற ஜூலை௴ 30௳ இந்தியா மந்திரி வாயிலாக பிரிட்டிஷ் அரசாங்கம் அதையே வற்புறுத்திக் கூறியதாவது :—

> இந்தியா பரிபூரண சுயேச்சை யடைவதற்கான எல்லா சந்தர்ப்பங்களையும் கொடுக்கவேண்டுமென்று பிரிட்டிஷ் அரசாங்கம் உறுதி கொண்டிருக்கிறது.

இதை ஒரு சந்தர்ப்பமாகக் கொண்டு எதிரி ரேடியோக்கள் பிரசாரத்தில் இறங்கி விட்டன. காங்கிரஸார் ஒத்துழையாமை இயக்கம் ஆரம்பிக்கப் போவதாகப் பயமுறுத்தியதனால் தான், பிரிட்டிஷ் சர்க்கார் தம் திட்டத்தை மாற்றிக் கொள்ளவோ வாபீஸ் பெற்றுக் கொள்ளவோ முன்வருகிறார்கள் என்று அவை பொய்ப் பிரசாரம் செய்கின்றன. இது பற்றிய தப்பு எண்ணங்களுக்கு இடமில்லா திருக்க வேண்டித் தான், அமெரி தெளிவாக, கீழ்க் கண்டவாறு குறிப்பிட்டிருக்கிறார் :—

> காங்கிரஸ்காரர்களின் சமீப காலப் போக்கு எப்படிப் பட்டதாக இருந்த போதிலும், பிரிட்டிஷ் அரசாங்கத்தின் பரந்த நோக்கத்தில் எவ்வித மாறுதலும் கிடையாது.

அப்போது இந்தியாவில் வியாபாரஞ் செய்யும் பிரிட்டிஷ்காரர்களுடைய நன்மைகளைப் பாதுகாப்பதைக் குறித்து ஒரு வாக்குறுதியை பிரிட்டிஷ் அரசாங்கம் கொடுக்க வேண்டுமென்று இந்தியா மந்திரியை காமன்ஸ் சபையில் கேட்டனர். அக்கேள்விக்கு அவர் அளித்த விடையாவது :—

> பிரிட்டிஷ் வியாபாரிகளுக்கு விசேஷப் பாது காப்புகள் அளிக்கப்படத் தான் வேண்டு மென்றும் அப்போது தான் அத்திட்டப்படி பரிபூரண சுயேச்சை வழங்கப்படு மென்றும் இத்திட்டத்தில் குறிப்பிடப் படவில்லை. யுத்தம் முடிந்த பிறகு அவர்கள் எந்த விதமான திட்டத்தை வகுத்தாலும் சரியே ; அத்திட்டம் அமுலில் இருக்கும் போது தான் இது போன்ற விசேஷப் பாது காப்புகளைக் குறித்துப் பேசி முடிவு செய்து கொள்ளுவதற் கியலும்.

இதே பிரச்னையைக் குறித்து டெவொன்ஷையர் பிரபு, பிரபுக்கள் சபையில் குறிப்பிட்டிருப்பதாவது :—

> இந்தியர்கள் நம்மிடம் பாடம் படித்துக்கொண்டிருக்கிறார்கள் என்னும் எண்ணம் நம்மை விட்டு மறைந்து விட்டது. உண்மையிலேயே நம்மோடு ஒத்த நிலையில் சமஉரிமைகள் உடையவர்களாகி விட்டார்கள் என்னும் எண்ணம் மேவி வருகிறது.

பிரிட்டிஷ் பிரபுக்கள் இனத்திலேயே மிகச் சிறந்த பதவியி லுள்ள ஒரு பிரபு இப்படிக் கூறிக் கொண்டிருக்கிற அதே வேளையில், ஜப்பான் ரேடியோ சைகோனிலிருந்து என்ன கூறுகிறது என்று கவனிப்பது பொருத்தமாகும். இங்கிலாந்தி லுள்ள கோடீஸ்வரர்களும், பிரபுக்களும் விசேஷச் சலுகைகள் உடையவர்களாம் ! தம் இன்ப வாழ்வையும் சொத்துக்களையும் விட்டுக் கொடுக்க மாட்டாதவர்களாம் ! இந்தியாவிலுள்ள 100-க்கு 90 பேர்களின் கருத்துக்களுக்கு விரோதமாக 40 கோடி இந்தியர்களையும் ஆளுகிறவர்களாம் ! இப்படிப் பட்ட நிலைமையை ஒழிக்க வேண்டித் தான் காங்கிரஸ் வேலை செய்து கொண்டு வருகிறதாம் ! வார்தாவில் நிறைவேறிய காங்கிரஸ் காரியக் கமிட்டித் தீர்மானத்தை எல்லா எதிரி ரேடியோக்களும் மிகவும் உற்சாகமாக வரவேற்கின்றன ; ஆதரிக்கின்றன. சென்ற சில நாட்களாக இந்தக் கோரிக்கைகளை வற்புறுத்தும்படியும் காங்கிரஸை அவை தூண்டுகின்றன. அச்சு அரசாங்கங்கள் வெற்றி மேல் வெற்றி யடைந்து கொண்டு வருவதை யொட்டித் தான், பிரிட்டிஷ் அரசாங்கம் அதிகமாக விட்டுக் கொடுக்க இசையும் என்றும் சொல்லுகிறார்கள். சென்ற ஜூலை௴ 30௳ சைகோன் ரேடியோ கூறியதாவது :—

> " ஸ்டாலின்கிராட் ஆபத்திற் குள்ளாகி யிருக்கிறது ; அப்படியே தான் அலெக்சாந்திரியாவும். ஆகையால் இன்னும் அதிகமான வசதிகளை நீங்கள் பெறலாம் "

என்று இந்தியர்களுக்கு அறிவிக்கிறது.

ஆனால் உண்மையான நிலைமையைக் கொண்டு இப்படிப் பட்ட முடிவிற்கு ஒரு போதும் வர முடியாது. இதற்குத் தகுந்த காரணங்க ளுண்டு.

> இரக்க மற்ற எதிரிகள் இந்தியாவைத் தாக்கிக் கைப் பற்ற ஏற்ற சமயத்தை எதிர் நோக்கிக் கொண்டிருக்கிறார்கள். ஆகையால், யுத்தம் நடை பெறும் வரை எந்த வகையான விசேஷச் சலுகையும் காட்டப் பட மாட்டாது. இல்லா விட்டால், இந்திய அரசாங்க வேலைகள் தடைப் பட்டு அரசாங்கத்திற்கே ஆபத்து நேரக் கூடும். அதனால் இந்தியாவின் பாதுகாப்பே குலைந்து போகும். இதைப் பொருத்துத் தான் யுத்த சப்ளைகளைச் செய்ய வேண்டி யிருக்கிறது. இப்படிப் பட்ட ஆபத்திற் குள் இந்தியாவும் சீனாவும் சிக்கி யிருப்பதனால் தான், வார்தா தீர்மானம்

இந்தியாவிற்கே மகா பாதகமான தென்று அமெரிக்கர்களும் பிரிட்டிஷார்களும் கூறுகிறார்கள். இந்தியாவிற்குப் பரிபூரண சுயேச்சை வழங்கும் விஷயத்தில், அமெரிக்கப் பத்திரிகைகளிலும் பிரிட்டிஷ் பத்திரிகைகளிலும் பிரிட்டிஷ் அரசாங்கத்திலும் கூட எந்த விதமான மாறுதலும் ஏற்பட்டு விட வில்லை.

கிரிப்ஸ் திட்டத்தை ஏற்றுக் கொள்ள காங்கிரசும் லீகும் மறுத்தவுடனே அச்சு அரசாங்கங்கள் அடைந்த ஆனந்தத்திற்கு அளவே இல்லை. அப்போது, அதாவது ஏப்ரல் மீ 13உ அச்சு அரசாங்கங்களின் சகாவான ஹெல்சிங்கி ரேடியோ கீழ்க் கண்டவாறு கூறியது :—

இந்தியாவில் கிரிப்ஸ் திட்டத்தை இந்தியர்கள் நிராகரித்தது, அச்சு அரசாங்கங்களுக்கு ஒரு பெரிய வெற்றிக்குச் சமமாகும். இரண்டு நாட்களுக்குப் பிறகு, டோக்கியோ ரேடியோவும் இதுபற்றி குறிப்பிட்டது. அப்போது, இந்தச் சமரச முறிவினால், சீன அரசாங்கம் மிகுந்த ஏமாற்ற மடைந்த தென்றும், தாம் அது கண்டு மகிழ்ந்ததாகவும் அறிவிக்கிறது. இது நிகழ்ந்து 3½ மாதங்கள் ஆகி விட்டன. இந்த 3½ மாத காலமாகவே பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு விரோதமாகப் பிரசாரம் செய்வதே தம் தொழிலாகக் கொண்டிருக்கின்றன இந்த ரேடியோக்கள்.

நிற்க, சர் ஸ்டாபோர்ட் கிரிப்ஸ் இந்தியாவிற்கு வந்திருந்த போது, உத்தியோகப் பற்றில்லாத முறையில் ஆசிரியர் கூப்லாந்து வந்திருந்தார். அரசியல் அமைப்புப் பிரச்னைகளைக் குறித்து ஆராய்ச்சி செய்து இங்கிலாந்திலுள்ள நப்பீல்ட் கல்லூரிக்குத் தன் கட்டுரையை அனுப்பும் பொருட்டு அவர் இங்கு வந்தவர். சர் கிரிப்ஸ், தன் கோஷ்டியில் சேர்ந்து தனக்கு உதவி புரியும்படி அவரை நேரில் கேட்டுக் கொண்டதற் கிணங்க அவர் சேர்ந்தார். இப்படிப் பட்டவர் சில குறிப்புக்களை எழுதி வைத்திருக்கிறார். இந்தியா பரிபூரண சுயேச்சை யடைய, எல்லா வித சந்தர்ப்பங்களும் அளிக்கப்படும் என்னும் கொள்கையை வற்புறுத்திக் கூறுவதென்றால், அதன் அர்த்தம் என்ன என்று அக்குறிப்புகள் தெளிவாக்குகின்றன. சர் கிரிப்சும் பத்திரிகைப் பிரதிநிதிகளும் டில்லியில் சந்தித்தபோது அவர்கள் கேட்ட கேள்விகளும், அளிக்கப்பட்ட விடைகளும் வருமாறு :—

கேள்வி.—பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு இந்திய யூனியன் கட்டுப் பட்டிருக்க வேண்டிய தில்லை என்று கூற உரிமை உண்டா?

விடை.—உண்டு.

கேள்வி.—உலகிலுள்ள மற்றெந்த நாடுகளுடனாவது ஒப்பந்தம் செய்து கொள்ள இந்திய யூனியனுக்கு உரிமையுண்டா?

விடை.—உண்டு.

கேள்வி.—கவர்னர் ஜெனரலின் நிலைமை என்ன?

விடை.—அரசியல் அமைப்பை வகுக்கும் ஸ்தாபனத்தார் தம் இஷ்டம் போல் இந்தப் பிரச்னையை முடிவு செய்து கொள்ளலாம்.

கேள்வி.—இந்தியாவை விட்டு எந்தப் பருவத்தில் பிரிட்டிஷார் வெளியேறுவதாக உத்தேசம்?

விடை.—இப்போதுள்ள அரசியல் அமைப்பிற்குப் பதிலாக புதிய அமைப்பை வகுத்து முடித்த வுடனே, பிரிட்டிஷ் அரசாங்கம் அதை ஏற்றுக் கொள்ளும்; அதற்கு ஆதரவு கொடுக்கும். இந்தப் புது அமைப்பு அமுலுக்கு வரும் போது, மாறுதல் ஏற்பட்டு விடும்.

கேள்வி.—தாங்கள் எங்களுக்கு என்ன கொடுக்கப் போகிறீர்கள் என்று எனக்குத் தெளிவாகச் சொல்லுங்கள் நாங்கள் கோருவதெல்லாம் "விடுதலை" தான்.

விடை.—மிக எளிதென்று நாங்கள் கருதுகிற 'பரிபூரண சுயாட்சி' என்ற பதத்தையே உபயோகிக்கிறோம். இது தான் சரியான பொருளைக் கொடுக்கும் என்று கருதுகிறோம். இதில் பரிபூரண சுய உரிமையும், சுய ஆட்சியும் அடங்கி யிருக்கிறது என்பதைப் பற்றி, கொஞ்சமும் சந்தேகமே கிடையாது.

# பெரும் ஆபத்தில் ருஷ்யாவிற்கு உதவி

## இஞ்சினீர் விம்பர்லி கூறும் விவரங்கள்

இங்லாந்தி லிருந்து ருஷ்யாவிற்கு யுத்தத் தளவாடங்களை எல்லாம் கொண்டு, வட துருவக் கடல் வழியாகத் தான் போக வேண்டி யிருக்கிறது, இத் தளவாடங்கள் இங்கிலாந்தி லிருந்தும் அமெரிக்காவி லிருந்தும் அனுப்பப் படுபவை. வழியோ மிகவும் தூரம். இப்போது அக்கடலில் பகல் வெளிச்சம். எதிரிகளின் தாக்குதல்களுக்கும் சில சமயங்களில் உள்ளாக வேண்டி யிருக்கிறது. இப்படிப் பட்ட ஆபத்துக் களுக் கிடையே தளவாடங்கள் ருஷ்யாவிற்குப் போய்ச் சேர்ந்து கொண்டு தான் இருக்கின்றன. இவற்றைக் கொண்டு போகும் கப்பல்களுக்குத் துணையாக சில கப்பல்களும் போவது வழக்கம். இப்படிப் பட்ட ஒரு கப்பலில் ஒரு இஞ்சினீர் போனார். அவருடைய பெயர் ஆர். டி. விம்பர்லி. இவர் ஏறிப் போன கப்பலை எதிரிகள் தாக்கினார்கள். அதனால் அவரது கால்களில் ஒன்று முறிந்து போனது. மேலும் பனியினாலும் பெரிதும் அடி பட்டிருந்தார். இப்போது ரெக்ஸாசைச் சேர்ந்த ஹெலிஸ்டன் வைத்தியசாலையில் குணமடைந்து வருகிறார். அவர் கூறியதாவது :—

எங்கள் கப்பலை எதிரிகளின் விமானப் படையும் கப்பற் படையும் வெகுவாகத் தாக்கின. குதிரைப் படை தவிர மற்ற எல்லா வகை சக்தியையும் அவர்கள் எங்கள் மீது விடுத்தனர். பனிக் கட்டி மட்டும் இளகா திருந்தால் கண்டிப்பாகக் குதிரைப் படையையும் எங்கள் மீது ஏவி இருப்பார்கள். நாங்கள் போக வேண்டி யிருந்த பாதையோ மிக மிக பயங்கரமானது. ஒருபுரம் பனிக்கட்டி மலை மலையாக உறைந்து கிடக்கிறது. மற்றொரு புரம் எதிரிக்குச் சொந்தமான ஏராளமான நீர்மூழ்கி கப்பல்கள். இவை வெளிப்படையாக இருந்தாலும், நம் கப்பல்கள் எச்சரிக்கையாகப் போகலாம். ஆனால், அவை பதுங்கிக் கொண்டு தான் இருக்கின்றன. எங்கள் கப்பலுக்குத் துணையாக வந்த மற்றொரு கப்பலின் படைத் தலைவர், உள்ள நிலைமையைக் கவனித்தார். எதிரிகளைத் தாக்குவதில், தன் கப்பல் நாசமானாலும் பழுதில்லை என்று முடிவு செய்து கொண்டார்.

இந்தக் குரூய்சர் கப்பலுக்கும் எதிரி நீர்மூழ்கிக் கப்பலுக்கும் இடையே இருக்கும் பனிக் கட்டிமீது தன் கப்பலை வெகு வேகமாகக் கொண்டு போய் மோதி, தன் கப்பலில் இருந்த எல்லாப் பீரங்கிகளையும் ஒரே காலத்தில் இளப்பினார். இதன் பயனாக 3 ஜெர்மன் நாசகாரிகள் ஒழிந்தன. இப்படிப் பட்ட பயணங்கள் மிகவும் கொடுமையானவை தான். இருந்தாலும், ரஷ்யாவிற்கு ஓயாது தளவாடங்கள் போய்க் கொண்டு தான் இருக்கின்றன.

ரஷ்யர்கள் நல்ல உடற்கட்டு உடையவர்கள். அறிவுடையவர்கள். தம் உடைமைகளை எவ்வளவு சிறந்த முறையில் பயன் படுத்திக் கொள்ளுவ தென்று அவர்களுக்கு நன்றாகத் தெரியும். ஒரு டாங்கியைக் கப்பலை விட்டுக் கரையில் இறக்கிய உடனே, அதைச் செம்மையாகப் பூட்டிக் கொள்ளுகிறார்கள். அதில் அமைக்க வேண்டிய பீரங்கிகள் முதலியவை அமைந்தான வுடனே, மோட்டாரைப் பூட்டி நேரே யுத்த களத்திற்குத் தான் அனுப்புகிறார்கள். இடை வழியில் நிற்பதே கிடையாது. ஏறக்குறைய ஒவ்வொரு இரவும் ஜெர்மானியர்கள் ருஷ்யத் துறைமுகங்கள் மீது வெடிகுண்டுகள் வீசிச் சேதப் படுத்துகிறார்கள். மறு நாள் பகலில் அவற்றை யெல்லாம் ரஷ்யர்கள் பழுது பார்த்து விடுகிறார்கள்.

# புளுகல் நிபுணர்கள்

தான் யமலோகம் போன பிறகு தன்னுடைய மூளையை எடுத்துப் பரிசோதித்துப் பார்க்கலாம் என்று சில பிரபல டாக்டர்களுக்கு 'ஹிட்லர் மகான்' அநுமதி கொடுத்திருக்கிறாராம். ஹிட்லருடைய மூளை ஒரு பெரிய வக்ரமூளை என்பது உலகறிந்த விஷயம். 'இந்த மூளை தான் என்ன மூளை ஐயா!' என்றே பலரும் அதைக் குறித்து ஆச்சரியத்தோடு சொல்கிறார்கள். அந்த மூளையை ஆராய்ச்சி செய்து பார்க்க; பல டாக்டர்கள் துடியாகத் துடித்துக் கொண்டிருப்பார்கள், இப்பொழுதெல்லாம் என்று கூட தைரியமாகச் சொல்லலாம். ஆனாலும் அந்த டாக்டர்கள் தான் வேறென்ன செய்ய முடியும்? நேச தேசத்தாரின் தயவால் தான் தமது ஆவல் சீக்கிரம் தணிய வேண்டும் என்ற எண்ணத்தோடு சும்மா இருக்க வேண்டியது தான்.

ஆனால் ஹிட்லரின் விசித்திர, என்! அதிபயங்கர சகாக்களின் நாக்குகளைப் பற்றி விவரமாக அறியாதவர்கள் இன்று இவ்வுலகத்தில் இருக்க மாட்டார்கள் என்றே நினைக்கிறோம். அந்த கப்பல்ஸ் துரைமகனின் நாக்கு இருக்கிறதே, அதைக் குறித்து ஆராய்ச்சி செய்ய அந்த துரை மண்டையைப் போடும் வரை காத்திருக்கத் தேவை இல்லை. இப்பொழுதே தெரிகிறதே அதன் அருமை பெருமைகள் எல்லாம்! கப்பல்ஸ் மட்டு மல்ல, ஹிட்லரின் வாடை வீசப் பெற்ற இத்தலியிலும், ஜப்பானிலும் இம்மாதிரியான சிருஷ்டிகள் பலர் இருக்கிறார்கள்.

தினம் விடிந்தால் ஒரு கலகமாவது மூட்டா விட்டால் நாரதர் தலை வெடித்து விடு மென்பார்கள். அதே ரீதியில், இந்த நிபுணர்கள் இருக்கிறார்களே, தினம் விடிந்தால், தினம் அஸ்தமித்தால், ஏதாவது ஒரு புளுகல் புளுக வேண்டு மென்று வைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

அகராதியில் உள்ள வார்த்தைகளில் பலவற்றைப் பொறுக்க வேண்டியது; தொகுக்க வேண்டியது; கலர் கொடுக்க வேண்டியது; ஓட்டை உடைசல்களைப் பொத்த வேண்டியது; ரேடியோ மூலம் காற்றோடு ஊதி விட்டு விட வேண்டியது. அப்புறம் அந்தப் புளுகல் ஆனபடி ஆகட்டும். அதைப் பற்றி அவர்களுக்குக் கவலையே இல்லை.

தினம் ஒரு புளுகல் புளுகுவதிலும் யார் பெரிய புளுகாகப் புளுகுகிறார்கள் என்பதிலுமே அவர்கள் கவனம் எல்லாம் போய்க் கொண்டிருக்கும் என்பதில் சந்தேகமே இல்லை. ஹிட்லர் தான் சரியான பாடமாக அந்த நாளிலேயே எழுதி வைத்திருக்கிறாரே? அது என்ன பாடமென்று தெரியுமா?

எப்பொழுது புளுக ஆரம்பித்தாலும், மலையத்தனை பெரியதாகப் புளுகி விட வேண்டும். அது கரைந்து, கரைந்து எலுமிச்சங்காய் அளவாவது வந்து நிற்கும்—இதுவே அந்த 'மகான்' செய்துள்ள அருமையான உபதேசமாகும். இதையே அவரது சிஷ்ய கோடிகளும், நண்பர் குழாங்களும் பின்பற்றி நடந்து வருகின்றன.

இதை நாம் மனதிலே வைத்துக் கொண்டால், ஜெர்மனி, இத்தலி, ஜப்பான் ஆகிய தேசங்களிலிருந்து பரப்பப்படும் செய்திகளுக்கு கர்த்தாக்களாக இருப்போரின் நாக்குகளிலே நரம்புகள் தான் இல்லவே இல்லையோ என்ற நினைவே ஏற்படும். அப்பா பாபா! என்ன புளுகல்! என்ன கப்ஸா! 'டேயப்பா! இந்தப் புளுகு கந்த புராணத்திலே கூட இல்லை என் ஆண்டவனே!' என்றானும் ஒருவன். அவன் சொன்ன வார்த்தைகள் நமது எதிரிகளது பிரசாரங்களைக் கேட்டு விட்டுத் தான் சொன்னவை போலிருக்கிறது.

பாருங்களய்யா! இன்று வெள்ளிக் கிழமையாச்சா! நாளைக்கு மறு நாள் ஞாயிற்றுக் கிழமை! இல்லையா? ஞாயிற்றுக் கிழமை என்ன நடக்கப் போகிற தென்று இன்று எப்படி சொல்ல முடியும்? சாதாரண நாளிலேயே அவ்வாறு தைரியமாக ஏதும் சொல்ல முடியாதே! அதிலும் இப்போது யுத்தம் நடந்து கொண்டிருக்கிறது. திடீர் திடீர் என்று சேனாதிபதிகள் போடும் திட்டங்கள் எல்லாம் குட்டிச் சுவராகப் போகக் கூடுமல்லவா?

சும்மா இப்படி பொதுவாகச் சொல்லுவானேன்! ருஷ்யாவிலே வாரனேஷ் என்ற நகரத்தைப் பிடித்து விட்டதாக, சுமார் பதினைந்து நாட்களுக்கு முன்பாகவே கூறினார்கள் ஜெர்மன் ரேடியோக்களில். ஆனால் நடந்த தென்ன? அந்த வாரனேஷ் நகர வாசற்படிக்கு அப்பால் ஒரு அடி கூட எடுத்து வைக்க வில்லை இந்த நாஸிகள். இப்பொழுதோ, அந்த நகரை விட்டே துரத்தப் பட்டு, வெகுதூரம் ஓடி விட்டார்கள். இதே மாதிரி, முன்புகூட ராஸ்டாவ் நகரத்தைப் பிடித்து விட்டதாக ஊருக்கு முன்னால் ரேடியோ தம்பட்டம் கொட்டினார்கள், ஆனால், பாவம்! அடிவாங்கு படலம் அதே ராஸ்டாவ் நகரி லிருந்து தான் தொடங்கிற்று.

இது தவிர, பிரிட்டன் மீதும் ருஷ்யா மீதும் படையெடுத்துச் செல்லும் நாஸி விமானிகள் ஆனை செய்து விட்டார்கள், பூனை செய்து விட்டார்கள் என்று ரேடியோவில் கதை அளக்கிறார்கள். ஏதாவது நடு நிலைமை வகிக்கும் நாட்டைச் சேர்ந்த கப்ப லொன்றை மூழ்கடித்து விட்டு, அபாண்டமாக, பிரிட்டன் மீதும், மற்று முள்ள தன் எதிரிகள் மீதும் பழியைப் போட்டு, நடு நிலைமை வகித்து வரும் நாட்டைச் சந்தியில் இழுத்து விடப் பார்ப்பதும் நாஸிகள் பழக்கத்தில் வைத்துக் கொண்டிருக்கும் முறைகளில் ஒன்றாகும்.

இத்தாலியர்கூட இம்மாதிரி வழிகளை க்ரியாம்சைப் படுத்திப் பார்க்கின்றனர். ஜெர்மானிய முத்தண்ணாக்களைப் போல இவர்கள் அவ்வளவு வெற்றி காண முடிய வில்லை.

ஆனால், குள்ள ஜப்பானியர் இருக்கிறார்களே, பலே ஆட்கள்! எல்லோரும் ஆளைத் தூக்கி வாயில் போட்டுக் கொண்டால், இவர்கள் ஆளை மட்டுமில்லாது நிழலையும் அள்ளி வாயில் போட்டுக் கொண்டு விடுவார்கள் போலிருக்கிறது. இவர்கள் புளுகல் பரீட்சையில் நிபுணத்வம் பெற்று விட்டதோடு நில்லாமல், பசப்பு வார்த்தைகளை அள்ளி விடவும் தங்களைத் தயார் செய்து கொண்டிருக்கிறார்கள். 'பர்மா பர்மியருக்கே!' 'சீனா சீனருக்கே!' 'இந்தியா இந்திய

ருக்கே !' என்ற வாக்கியங்கள் இந்த பசப்பு வார்த்தைகள் என்ற ரகத்தைச் சேர்ந்தவை தான். கேட்பதற்கு ரொம்ப இனிமையான பதங்கள் ! ஆனால், அத்தனையும் விஷப் பற்களோடும், அந்தரங்க சுத்தி யில்லாமலும் சொல்லப்படும் மொழிகளாகும்.

'பர்மா பர்மியருக்கே !' என்று பர்மா சண்டை நடந்து கொண்டிருக்கும் பொழுது ஜப்பானியர் பிரமாதமாகப் பேசிக் கொண்டார்கள். ஆனால் இந்தப் பசப்பு மொழிகளைக் கேட்டு மயங்கிய சில பர்மியர்களது உதவியோடு, ஜப்பானியர் பர்மாவைத் தம் வசப்படுத்திக் கொண்டு விட்டார்கள்.

அதற்கு மேல் அங்கு நடப்ப தென்ன ? பர்மிய வியாபாரிகள் கொழுத்துச் செழித்த இடங்களில் ஜப்பானிய வியாபாரிகள் முளைத்து விட்டார்களாம். பர்மிய குமாஸ்தாக்கள் உட்கார்ந்து பேனா கட்டியஸ் தானங்களுக்கு ஜப்பானிலிருந்து பையன்களும், குட்டிகளும் வந்து இறங்கி விட்டார்களாம். முக்யமான அதிகாரிகள் எல்லாம் இப்பொழுது ஜப்பானியர்கள் தானாம். அவர்கள் எல்லாம், கிராமங்களில் சென்று கிராம வாசிகள் சேர்த்து வைத்திருக்கும் உணவுப் பொருள்களை! 'ஸ்வாஹா' செய்து வருகிறார்களாம். பர்மியர்க ளனைவரும், ஜப்பானியருக்காகவே வேலை செய்ய வேண்டு மென நிர்ப்பந்திக்கப் படுகிறார்களாம். பர்மாவில் கிடைக்கும் பொருள்களை ஜப்பானுக்குக் கொண்டு செல்ல, வழி ரொம்ப சுற்றாக இருக்கிறதல்லவா ? அந்தக் குறையை நீக்க புதுப் புது ரயில் பாதைகள் போட்டு, இந்தோ-சீனாவையும் பர்மாவையும் ஒன்றாகப் பிணைக்கப் போகிறார்களாம். தவிர, பர்மாவில் கிடைக்கும் பொருள்களை உடனே தமக்கு உபயோக முள்ளதாகச் செய்யவே, பர்மாவில் மின்சார உற்பத்தி நிலயத்தை ஸ்தாபிக்கப் போகிறார்களாம். ஒவ்வொரு கச்சா பொருளையும் ஜப்பானுக்குச் சுமந்து சென்று, அங்கே உள்ள தொழிற்சாலைகளில் அந்தப் பொருளை ஆயுதமாகவோ, விமானமாகவோ ஆக்குவது என்றால் சிரமம் தானே ? அந்த சிரமத்தைத் தீர்க்கவும், பர்மியர் செலவிலேயே தமக்கு வேண்டியதைச் செய்து கொள்ளவுமான வழி இதெல்லாம். மற்றும் பர்மாவி லிருந்த அசல் பணத்தை யெல்லாம் அப்புறப்படுத்தி விட்டு, உபயோக மற்ற ஜப்பானிய நோட்டுகளை ஏகமாகச் செலாவணியில் கொண்டு வந்து விட்டார்களாம், இதற்கெல்லாம் 'பேரேமி'? பர்மா பர்மியருக்கே ! ரொம்ப அழகாயிருக் கோல்லியோ கதை ?

ஜப்பானியருடைய உண்மைக் குணத்தைத் தான் மஞ்சூகோவிலும், கொரியாவிலும் பார்த்தாச்சே ! அதே குணம் தானே அவர்களுக்கு எங்கு சென்றாலும் இருக்கும் ! கழுதை என்ன தான் இடி போல் முழக்கிக் கத்தினாலும், அது குதிரையாகி விடுமா ? அதே போல, ஜப்பானியர் என்ன தான் கற்கண்டு போல இனிப்பாகப் பேசி, 'எல்லாம் உங்கள் நன்மைக்காகவே தான் நாங்கள் வருகிறோம். நீங்கள் சுகமாக, கஷ்ட மில்லா திருக்க வேண்டு மென்பதே எங்களது விருப்பம்' என்று கூறிக் கொண்டு வந்தாலும், எல்லாம் வேஷமய்யா ! கபட நாடகமய்யா ! என்று அதற் கெல்லாம் காது கொடுக்காமல், அவர்களையும் நெருங்க வொட்டாமல் தடுப்பதே புத்திசாலித் தனமாகும். அதை விட்டு, அவர்கள் வார்த்தையை நம்பினாலும் சரி, அவர்களது வார்த்தைகளுக்கு மதிப்புக் கொடுத்து, அதைப் போய் நாலு பேரிடம் சொல்லி அதற்கு விளம்பரம் கொடுத்தாலும் சரி, நஷ்டமும் கஷ்டமும் தான் உண்டாகுமே ஒழிய லாப மிராது.

'ஆஹா ! ஏ கருங் காகமே ! உனது மேனி அழகு தான் என்னே ! அந்த அழகு என் கண்ணைப் பறிக்கிறதே பெண்ணே ! இவ்வளவு மேனி அழகை உனக் களித்திருக்கும் பகவான், அற்புதமான சாரீரத்தையும் கொடுக்க மறந்திருக்க மாட்டான் என்றே நினைக்கிறேன். உனது மேனியழகும், குரலினிமையும் என்னைப் போன்ற ரஸிகர்களது கண்களுக்கும், காதுகளுக்கும் விருந் தளிக்கவே உன்னிடம் அமைந்திருக்கின்றன. ஆகவே, மாட்டேன் என்று சொல்லாமல், அழகாக ஒரு பாட்டுப் பாடம்மா கேட்டு மகிழ்ந்து விட்டுப் போகிறேன்' என்று சொல்லிற்றும். அப்பத்தை வாயில் கௌவிக் கொண்டிருந்த காகத்தைப் பார்த்து. அதற் கப்புறம் கதை தெரியு மோல்லியோ ? நரியின் பசப்பு வார்த்தைகளில் அப்படியே மயங்கி விட்டது காகம். உச்சி குளிர்ந்து, தன்னையும் மறந்து, ஏதோ பாட வென்று வாயைத் திறக்கவே, அப்பம் கீழே தொப் என்று விழுந்தது. 'கப்' என்று நரி அதைக் கௌவி எடுத்துக் கொண்டு, விட்டது சவாரி. நஷ்ட மடைந்தது யார் ?

அதே போலத் தான் ஜப்பானியரது பசப்பு மொழிகளையும், புளுகல் பிரசாரத்தையும் காது கொடுத்துக் கேட்பவர்களுடைய கதியும். அவர்கள் 'இந்தியா இந்தியருக்கே ! இந்த நிலைமை ஏற்பட நாங்கள் உதவ வருகிறோம்' என்று சொல்லுகிறார்கள். இந்தியா விஷயத்திலே இத்தனை காலமாக இல்லாத அபிமானம் இப்பொழுது எங்கிருந்தய்யா திடுதிப்பென்று முளைத்தது ? பொன் விளையும் இந்த நாட்டைச் சுரண்டி, ஓட்டாண்டியாக ஆக்குவதே ஜப்பானின் நோக்கம். இதற்கு நாம் இடம் கொடுக்கலாமா ? இந்திய பாஷைகளில் ஜப்பான்காரன் ஏதோ பேசுகிறான் என்று அதைக் கேட்டு நம்பலாமா ? துஷ்டர் சகவாசம் பிராண சங்கடம் என்று எழுதி வைத்திருக்கிறார்களே பெரியவாள், அதை மறக்கலாமா ? தங்கள் வார்த்தைக்கு இந்தியர் எங்கே மதிப்புக் கொடுக்காது போய் விடுகிறார்களோ என்ற பயத்தால் தான், ஜப்பான்காரனும், ஜெர்மனிக்காரனும் இரண்டு போஸ்களின் குரல்களை இரவல் வாங்கிக் கொண்டு, அந்தக் குரல்களை உபயோகப்படுத்தி, விஷம ப்ரசாரம் செய்கிறார்கள், புளுகல் மூட்டையை அவிழ்த்து விடுகிறார்கள். இதை யெல்லாம் நம்பாதே ஐயா, நம்பாதே !

---

## யுத்த சேதம்

ஐ.ஜி.எஸ்.சி.-யைச் சேர்ந்த ஜி.எஸ்.எப். 1347-ம் நம்பர் டபுள்யு. வெய்டர் முனிசாமி யுத்தத்தில் காயப்பட்டார் என்ற செய்தியை வருத்தத்துடன் அறிவிக்கிறோம்.

# ஜெர்மனியிலும், ருஷ்யாவிலும்

இன்றைய தேதியில் ஜெர்மனியிலும், ருஷ்யாவிலும் உள்ள நிலைமை பல விசேஷங்களுடன் கூடியதாகவே இருக்கிறது முதலிலே ருஷ்யாவின் நிலைமையைக் கவனிப்போம். ரஷ்யர்களுக்கு அளவற்ற உணவை அளித்துக் கொண்டிருந்த யூக்ரேன் பிரதேசம், டான், டானெட்ஸ் நதிகள் பாய்ந்தோடும் கரி, இரும்பு உற்பத்தியாகும் பிரதேசம், ராஸ்டாவ் போன்ற முக்யமான தொழிற்சாலை நகரங்கள் எல்லாம் ஜெர்மானியர் வசமாகி விட்டன. காகஸஸ்ஸிற்கே ஆபத்தை உண்டாக்கும் நிலைமையி லிருசகிருர்கள் வான் பாக்கின் அச்சு நாட்டுப் படைவீரர்கள். மூன்று திசையிலே இவர்கள் முன்னேறிக் கொண்டிருக்கிருர்கள். நாளுக்கு நாள் ஆபத்து அதிகமாகி வருகிறது.

'கடைசி வரை ஒவ்வொரு ருஷ்யனும் போராடியே தீர வேண்டும். ஒவ்வொரு போர் வீரனிடமும் ஒப்படைக்கப் பட்டுள்ள ஒவ்வொரு அங்குல இடமும் சாத்யமான வரை பாதுகாக்கப் பட்டே ஆகவேண்டும்' என ஸ்டாலின் ஒரு வேண்டுகோள் விடுத்திருக்கிருர்.

ருஷ்யப் போர்முனையிலே பெரும் போடாகப் போட்டு, ஒரே யடியில் வெற்றி கண்டு விட வேண்டு மெனும் நோக்கத்துடன், நாஸிகள் ப்ரான்ஸி லிருந்தும், எகிப்தி லிருந்தும் ஆட்களைக் கொணர்ந்து குவித்துக் கொண்டிருக்கிருர்களாம். டான் பிரதேசத்திலே மட்டும் 6 லக்ஷம் நாஸி காலாட்கள், நாற்பதாயிரம் நாஸி டாங்கிகள், 5 நாஸி விமானப் படை கோஷ்டிகள் போரில் ஈடு பட்டிருக்கின்றனவாம். ருஷ்யர்களின் எதிர்ப்போ அபாரமாக இருக்கிறதாம். ஒரு இடத்திலே ஒரு சிறு ருஷ்யப் படை, பதினுயிரத்து எண்ணூறு ஜெர்மானியர்களைச் சரி பார்த்து விட்டதாம். ருஷ்ய சேனுபதி, மேற்கொண்டு ரிஸர்வ் படைகளைக் கொண்டு வருகிருராம். பெரிய சோதனை காலம் தான் ருஷ்யாவிற்கு!

யூக்ரேன் போனதால், ருஷ்யாவிலே உணவுப் பஞ்சம் ஏற்படும் போலிருக்கிறது. உடனே ருஷ்ய சர்க்கார் ஜரூராக நடவடிக்கை எடுத்து, ஆபத்து அதிக மில்லாத பிரதேசங்கள் பலவற்றைக் காட்டி, அங்கே பயிரிடும்படி ருஷ்யர்களைக் கேட்டுக் கொண்டிருக்கிறது. ருஷ்ய மாதரும், பையன்களும் உத்சாகத்தோடு இந்த வேலையில் ஈடு பட்டு விட்டார்கள்.

ஆனல் ஜெர்மனியில் எப்படி? அங்கு வாலிபர்களே கண்களில் தென்படக் காணேமாம். தாத்தாக்களும், பாட்டிகளுமே வயல்களில் வேலை செய்கிருர்களாம். ஜெர்மனி அருமையாகப் பெற்றெடுத்த வாலிபர்களை யெல்லாம் தான், பாழுங் கிணற்றில் தள்ளியது போல் ருஷ்யப் போர் முனையில் பலியாகக் கொடுத்துவிட்டாரே ஹிட்லர்! இப்பொழுது வாலிபர்களுக்கு எங்கே போவது?

அநுதினமும் ஜெர்மனியிலும், ஜெர்மனி பிடித்துக் கொண்டிருக்கும் பிரதேசங்களிலும் பிரிட்டிஷ் குண்டு மழை பெய்த வண்ணமாகவே இருக்கிறது. ஜெர்மனியில் ஹிட்லருக்கு இருக்கும் மதிப்பு குறைந்து கொண்டே வருகிறதாம். கொயரிங், வான்பாக், ராமல் போன்றவர்களே இன்றைய ஜெர்மானியரின் திருஷ்டியில் இருக்கிருர்களாம். ருஷ்யாவிலும் எகிப்திலும் கிட்டிய வெற்றி, நாஸிப் படைகளிடை ஏகமாக உத்சாகத்தைக் கிளப்பி விட்டிருக்கிறதாம்.

இரண்டாம் போர் முனை பற்றிய பேச்சு நாளுக்கு நாள் வலுத்து வருகிறது. இரண்டாம தாவது, போர் முனையாவது என்று கேலி செய்து கொண்டிருந்த ஜெர்மனியர் எல்லாம் இப்பொழுது வயிற்றிலே நெருப்பைக் கட்டிக் கொண்டிருக்கிருர்களாம். அமெரிக்காவிலே அதி நூதனமான, பயங்கர ஆயுதங்களைத் தயாரித்து வருகிருர்களாம். எல்லாம் இந்த நாஸித் தேவதைகளை உருவில்லாமல் செய்யத் தான்! பிரமாதமான கப்பல் சேதத்தாலும், போர்முனைகள் பல இடங்களில் பரவி இருப்பதாலும் நேசநாடுகளுக்கு சிரமம் அதிகரித்திருக்கிறது என்பது உண்மை தான். அதோடு ஆத்திரமும், பலமும் அதிகரித்து வருகின்றன என்பதை மறந்து விடக் கூடாது. அடிக்கிற சமயத்தில் பேயடியாக அறைந்து, கழுதையைக் கீழே விழ அடித்துத் தள்ளி விட மாட்டார்களா? அந்தக் காலம் சீக்கிரமே வரும் போலிருக்கிறது.

---

# சேதம் ஒரு பொருட்டல்ல---
# இலட்சியம் தான் குறி

## ஹிட்லரின் ருஷ்யப் போர்க் கொள்கை

### மிஸ்டர் விக்ஹாம் ஸ்டீட் கருத்து

'ருஷ்யாவும் நேச தேசங்களும்' என்னும் தலைப்பின் கீழ் மிஸ்டர் விக்ஹாம் ஸ்டீட் கீழ் கண்டவாறு எழுதுகிருர்:—

சில நாட்களுக்கு முன் இருந்த நிலைமையையும் இப்போதுள்ள நிலைமையையும் வெளி நோக்காகப் பார்ப்போமானல், எந்த வித வேற்றுமையும் இருப்பதாகத் தோன்ருது. ஆனல், இந் நிலைமை ஒரு முக்கியமான பலனைத் தரத் தான் போகிறது. இந்தப் பலன், யுத்தத்தையே முடித்து விடும் என்றும் சொல்லுவதற் கில்லை.

ஏராளமான சேதத்திற்குப் பிறகு சிறந்த சில பாகங்களை ரஷ்யாவில் ஹிட்லர் வென்றிருக்கிருர். ரஷ்யப் படைகளான திமோஷாங்கோவின் படைகளை டான் நதிப் பிரதேசத்திலிருந்து பின் வாங்கும்படிச் செய்து விட்டார். மீண்டும் மாஸ்கோவைத் தாக்க ஆயத்தம் செய்து கொண்டிருக்கலாம். ரஷ்யர்களின் எதிர்ப்பை அவர் இன்னும் தகர்த்து விடவில்லை. மிகப் பலமான ரஷ்யப் படைகளோடு இன்னும் அவர் போராடா திருக்கலாம். தனக்கு எவ்வளவு சேதம் ஏற்பட்டாலும் அதைப் பொருட்படுத்தாதபடி, முழு மூச்சாகத் தாக்குவது அவருடைய யுத்த தந்திரம். இப்படித் தான் கீழ் திசையில் தாக்கிப் புகுந்து கொண்டு போயிருக்கிருர். இதிலிருந்து ஒரு விஷயம் தெளிவாகிறது. பிரிட்டிஷ் அமெரிக்கப் படைகள் எல்லாம் அப்போர் முனைக்குப் போய்ச் சேரு முன்னதாகவே பெரும் பகுதிகளைப் பிடித்து விட வேண்டும் என்னும் நோக்கத் தோடு தான் சேதத்தைப் பொருட்படுத்தாதபடி முன்னேறிக் கொண்டு போகிருர்.

இருந்தாலும், மிகக் கடுமையாகத் தாக்கப் படுகிற ரஷ்யர்களுககு உதவியாக பிரிட்டிஷ் அமெரிக்கப் படைகள் கூடிய விரைவில் ரஷ்யப் போர் முனைக்குப் போகக் கூடும். இப்போது இங்கிலாந்தில் பலமான அமெரிக்க விமானப் படைகளும் தரைப் படைகளும் இருக்கின்றன. எதிரியைத் தாக்குவதற்குக் கட்டளையை ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றன. சமீபத்தில், ஐரோப்பியப் போர்முனையிலுள்ள அமெரிக்கப் படைத் தலைவரான ஜெனரல் எய்சினெளவர் ஒரு அறிக்கை விடுத்தார். அதில், தனக்கும் தன் படைகளுக்கும் பிரிட்டிஷ் அதிகாரிகளும் பொதுமக்களும் அளித்த வரவேற்பி லிருந்தும் கூட்டுறவி லிருந்தும், இந்த இரண்டு படைகளும் ஒன்றுபட்டு ஒத்துழைத்தால், வெற்றி நிச்சயமாகக் கிடைக்கும், என்று குறிப்பிடுகிருர்.

> நாம் எதிரிகளைத் தாக்குவோம், அதுவும் பலமாகத் தாக்குவோம்; கூடிய விரைவில் நமது பலம் எப்படிப் பட்டது என்று ஜெர்மானியர்கள் உணருவார்கள்.

# காங்கிரஸ் தீர்மானம் பொருத்தமற்றது

## இதற்கு நாட்டில் ஆதரவில்லை

கீழ்கண்ட கட்டுரை ஒரு வாசகரால் அனுப்பப்பட்டது:—

ஜப்பானியர் நம் நாட்டைக் கைப்பற்ற வருவார்களே யானால், நம் நாட்டைக் காப்பாற்ற நாம் என்ன செய்திருக்கின்றோம் என்பதைப் பற்றி யோசனை செய்ய வேண்டும். இப்போது நடக்கும் யுத்தத்தில், எந்தத் தேசமும் தனித்து நின்று ஜர்மானியர் ஜப்பானியர் தாக்குதலை நிர்வகிக்க முடியாது. நேச தேசத்தார்களோடு சேர்ந்து அவர்களுடைய பக்க பலத்தோடு அல்லாது சமாளிக்க முடியாது.

இன்றையத் தினம் நம்முடைய நாட்டில் மகாத்மா காந்தியின் ஆதரவின் பேரில் காங்கிரஸ் காரியக் கமிட்டியார் ஆங்கிலேயர் வெளி யேற வேண்டும் என்ற தீர்மானம் நிறை வேற்றி யிருக்கிறார்கள். இந்தத் தீர்மானத்தின் பலனைப் பற்றி சிறிது ஆராய்வோம்.

இந்தத் தீர்மானம் நிறைவேறிய உடனே ஜப்பான் ரேடியோவும், பர்லின் ரேடியோவும் இந்தியர்கள் ஆங்கிலேயரிடத்தில் வெறுப்புக் கொண்டு, தங்களை வரவழைப்பது போன்று பிரசாரம் செய்யத் தொடங்கின. அதற்காக மகாத்மா காந்தி 'ஹரிஜன்' பத்திரிகையில், 'ஆங்கிலேயரைப் போகச் சொன்னால், உன்னை வரவழைப்பதாக அர்த்தமில்லை; நீ தப்பு அர்த்தம் கொள்ளாதே, ஜப்பானியரை இந்தியர் விரும்பவில்லை,' என்று நீண்ட தோர் வியாசம் எழுதி யிருக்கின்றார்.

இந்தச் சந்தர்ப்பத்தில் காங்கிரஸ் கமிட்டி தீர்மானப்படி ஆங்கிலேயரும் அவரைச் சார்ந்தவர்களும் இந்த நாட்டை விட்டு வெளி யேறுவார்களே யானால் என்ன நேரிடும் என்று சற்று ஆராய்பவர்களுக்கு இப்படிப் பட்ட தீர்மானம் பொருத்த மற்றது என்பது வெளியாகும்.

1. ஆங்கிலேயர் வெளியேறினால் நாட்டில் குழப்பமும் ஜாதி சமய வேறுபாட்டினால் கலகமும் அதிகமாகும் என்பதில் சந்தேக மில்லை.

2. இத்தீர்மானப்படி ஒத்துழையாமை இயக்கம் ஏற்படுமே யானால், எதிரியாகிய ஜப்பானியருக்கு துணிவு உண்டாகி நம் நாட்டின் மீது படை யெடுத்து நம்மக்களுக்கு கஷ்டத்தை ஏற்படுத்த இடமுண்டாகும்.

3. அதன் பலனாக நம் நாடு என்றென்றும் அடிமை நாடாகவே இருப்பதற்கு ஏதுவாகும்.

மகாத்மா சொல்வது போன்று ஆங்கிலேயரும் வெளியேற வேண்டும், ஜப்பானியரும் வரக்கூடாது என்றால், ஜப்பானியர் படை யெடுப்பிற்கு நம்மிடம் பாதுகாப்பு என்ன இருக்கிறது? அகிம்சா தர்மமும், ஒத்துழையாமை யுந் தான்! அகிம்சா தர்மத்திற்கு யார் மதிப்புக் கொடுப்பார்கள்? நாட்டு ஆசை பிடித்த ஜப்பானியர் சிறிதும் மதிப்பு கொடுப்பார்கள் என்று நினைக்க முடியாது. இது எதனை ஒத்திருக்கிறது என்றால், தஞ்சை அரசன் ஆதிகாலத்தில் எதிரி வந்த காலத்து துளசியை வழியில் போட்டதை ஒத்திருக்கின்றது! துளசி மகத்தான சக்தியுடையது. அதனைத் தாண்டுவானே யானால் அவன் மகா பாவி. அந்த பாவி வந்த நாட்டில் நாமிருக்கக் கூடாது என்று தஞ்சை அரசன் ஓடியது போல, அகிம்ஸா தர்மம் மேலானது; ஜப்பானியர் வருவாரே யானால் ஒத்துழைக்க மாட்டோம், மீறி நாட்டைக் கொள்ளை கொள்வார்களே யானால், அகிம்சா தர்மத்திற்கு மதிப்புக் கொடாத ஜப்பானியர் வந்த இடத்தில் நமக்கு வேலை யில்லை, என்று ஓட நேரிடும்.

இந்தக் காலத்து யுத்தத்தில் குண்டுக்குக் குண்டு, விமானத்துக்கு விமானம், டாங்கிக்கு டாங்கி கொண்டு சண்டை போடும் நாடுக ளெல்லாம் திணறுகின்ற இந்தக் காலத்தில், அத்தளவாடங்கள் உள்ள நாடுகளை விட்டுத் தனித்து நின்று அகிம்ஸா தர்மத்தில் எதிரியை வெல்வேன் என்று கூறுவது எவ்வளவு பொருத்த மற்றது என்பது வெளிப்படை.

இந்தத் தீர்மானத்துக்கு இன்றையத் தினம் நம் நாட்டில் ஆதரவு மிகவும் குறைவு என்பது திண்ணம். முஸ்லீம் லீக்கர்கள் இன்றையத் தினம் இதற்கு ஆதரவு கொடுக்க வில்லை. இந்து மகாசபையார் சீக்கியர்கள், மிதவாதிகள், சமதர்மக் கட்சியார், ஜஸ்டிஸ் கட்சியார் இத்தீர்மானத்தை இன்று எதிர்க்கிறார்கள். நாட்டிற்கு நன்மை பயக்காது என்று காங்கிரஸ் கட்சியிலும் திரு. சி. ராஜகோபாலாச்சாரியாரும் அவரைச் சேர்ந்தவர்களும் விலகி யிருக்கிறார்கள். காங்கிரஸ் கட்சியிலும் பக்தி உள்ளவர்கள் இம்மாதிரியான திட்டங்கள் பலவற்றில் பங்கெடுத்து ஓய்வு பெற்றவர்களாகக் காணப் படுகின்றார்கள். பல தடவைகளில் மகாத்மா காந்தி யவர்கள் தப்பு இழைத்தேன் என்று கூறியபடி, இதிலும் எதிர் காலத்தில் கூறுவாரோ என்று சந்தேகப் படுகிறார்கள். ஆதலால் இந்தத் தீர்மானத்துக்கு பொது ஜன ஆதரவு மிகவும் குறைவு என்பது வெளிப்படை.

---

# பர்மாவிலிருந்து விமானத்தில் வெளியேறியவர்கள்

## புள்ளி விவரம்

பர்மாவி லிருந்து இந்தியாவிற்குள் வந்து சரண் புகுந்து கொண்டவர்களின் எண்ணிக்கையில் எத்தனைப் பேர் விமானங்கள் மூலம் வந்து சேர்ந்தார்கள் என்ற புள்ளி விவரங்கள் இப்போது கிடைத் திருக்கின்றன. இவை உத்தியோக தோரணையில் வெளியிடப் பட்ட புள்ளிகள். 1942-ம் ௵ ஜனவரி ௴ 1௳ முதல் மே ௴ 9௳ வரை 11,210 பேர்கள் விமான மூலம் வந்து சேர்ந்திருக்கிறார்கள். ரங்கூன், லாஷியோ, மோடு, ஷ்வெயே ஆகிய இடங்களி லிருந்து சிட்டகாங்குக்கு வந்து சேர்ந்தவர்கள் 6,094. மொத்தம் வந்து சேர்ந்தவர்களில் இந்தியர்கள் 1,830 பேர்கள்; 3,060 ஐரோப்பியர்களும், ஆங்கிலோ இந்தியர்களும் ஆவார்கள். சிட்டகாங் வந்து சேர்ந்தவர்களில் இந்தியர்கள் 2,195 பேர்கள்; ஐரோப்பியர்கள் 291 பேர்கள்; ஆங்கிலோ இந்தியர்கள் 2,156 பேர்கள்; ஆங்கிலோ பர்மியர்கள் 403 பேர்கள்.

MADRAS: PRINTED AND PUBLISHED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS.